**Proceedings of the Public Hearing Meeting Conducted to consider the issue Environmental Clearance by the State Environment Impact Assessment Authority (SEIAA – TN) for the Proposed Rough Stone and Gravel Quarry in an extent of 4.37.50 Ha by M/s.M.R.Govindan Rough Stone and Gravel Quarry, S.F.No.3/1A, 3/1B,3/2 & 5/2 of Sirumailur Village and S.F.No.86/1,86/2, 87/1(Part) of Sithalampakkam Village, Uthiramerur Taluk, Kancheepuram District.**

**Name of the Project:** Proposed Rough Stone and Gravel Quarry by **M/s.M.R.Govindan Rough Stone and Gravel Quarry** in an extent of 4.37.50 Ha located at S.F.No.3/1A, 3/1B,3/2 & 5/2 of Sirumailur Village and S.F.No.86/1, 86/2, 87/1(Part) of Sithalampakkam Village, Uthiramerur Taluk, Kancheepuram District.

**Venue:** M/s. RRK Mahal,
No.167, Thirumukkudal, Thirumukkudal – Pinayur road, Uthiramerur Taluk, Kancheepuram District - 631 606.

**Date & Time:** 09.07.2025 – 11.30 AM

**Present:**

| | | |
|---|---|---|
| 1. | Mr. P.I. Ashik Ali, IAS | Sub Collector<br>Kancheepuram. |
| 2. | Mr. V.Purushothaman | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Sriperumbudur |
| 3. | Mr.V.Rangasamy | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Kancheepuram District. |
| 4 | Mr.R.Selvarajan | Assistant Manager<br>Tamil Nadu Pollution Control Board,<br>Sriperumbudur |
| 5 | Mr.R.Dravidaselvam | Typist<br>Tamil Nadu Pollution Control Board,<br>Sriperumbudur |
| 6. | Mr.M.R Govindan | Owner of the Proposed quarry |

| | | |
|---|---|---|
| 7. | Public, NGO's and Environmentalists | 65 Persons (List Enclosed) |

The District Environmental Engineer (DEE), Tamil Nadu Pollution Control Board, Sriperumbdur welcomed the Sub Collector Kancheepuram, Government Officials, General Public and NGO's/ Environmentalists for the Public hearing and informed that the proposed Rough Stone and Gravel quarry by M/s. M.R.Govindan, Rough Stone and Gravel Quarry, S.F.No.3/1A, 3/1B,3/2 & 5/2 of Sirumailur Village and S.F.No.86/1, 86/2, 87/1(Part) of Sithalampakkam Village, Uthiramerur Taluk, Kancheepuram District in an extent of 4.37.50 Ha attracts Environmental Impact Assessment Notification 2006, as amended under the category "B1" in the schedule 1(d) of the said notification. Furthermore, the DEE, TNPCB, Sriperumbudur has also informed the following.

The State Environment Impact Assessment Authority (SEIAA – TN) issued the Terms of Reference (ToR) with a public hearing on 22.10.2024 for preparing the Environmental Impact Assessment (EIA) report for the said activity under the Environmental Impact Assessment Notification, 2006 as amended.

The project proponent has submitted the draft EIA report to the office of the District Environmental Engineer, TNPCB, Sriperumbudur at Oragadam and requested to conduct the Public Hearing Meeting for its proposed activity. In this regard, Public Notices for this Public Hearing Meeting scheduled on 09.07.2025, were published in *New Indian Express* and *Daily Thanthi Newspapers* on 03.05.2025 with the approval of the District Collector, Kancheepuram. Further, Public announcements have also been made via speakers in the surrounding villages about this Public Hearing Meeting.

The District Environmental Engineer has added that the details of the proposed project and the Environmental Impact Assessment (EIA) study conducted would be explained through a PowerPoint presentation by the EIA Consultant on behalf of the Project Proponent. Furthermore, the DEE has requested that, after the presentation, the public clearly state their name and village details and then express their views, suggestions, and comments on the project, either verbally or in writing,

one by one. Additionally, he informed that the opinions and suggestions of the public and environmentalists will be recorded and forwarded to the SEIAA-TN and requested the Sub Collector of Kancheepuram to preside over the meeting.

The Sub Collector of Kancheepuram has requested that the project proponent explain the proposed stone quarry project and the Environmental Impact Assessment (EIA) research that was done for the public.

Following that, on behalf of the Project Proponent, the EIA Consultant welcomed the Sub Collector, District Environmental Engineer, Government Officials, General Public and Environmentalists and then explained the Proposed stone quarry Project and EIA study conducted with help of Power Point Presentation.

After the Presentation, the Sub Collector, Kancheepuram has requested the Public to express their views / opinions either verbally or in writing by clearly stating their names and villages. Consequently, the following are the perspectives and viewpoints that the public has expressed:

**1) Mr. Madhavan, Sirumailur Village panchayat Chairman.**

He stated that during Cyclone Vardah in 2016, the quarry owner provided essential food items such as rice, pulses, and oil worth Rs. 6 lakh to the public. Additionally, he paved a road for Sirumaiyalur and Sirudhamur schools, and constructed a cement road and an Anganwadi building for the village. He also stated that quarry vehicles are not spraying water on the road leading to Sirumaiyalur-Pazhayaseevaram village, thereby adversely impacting the local residents and school children. Therefore, he requested that steps should be taken to ensure quarry vehicles spray water on both sides of the road. Finally, he stated that he has no objection to the establishment of this quarry project.

**2) Mr.Sivakumar, Arunkundram.**

He said that due to the quarry, agriculture is not possible in their area, and that permission has been granted to quarry in Sirumayilur, Madur, and Shithalapakkam villages for 40 years. He stated that this is causing health problems

for children. He requested that quarry vehicles do not spray water on both sides of the road and that speed bumps be installed at various places on the roads. He mentioned that quarry vehicles carry more stones than the permitted amount, which causes accidents. Finally, he urged that there is no need of quarry in Sirumayilur and Chitthalapakkam villages.

**3) Mr,Saravanan, Sirudhamur Village.**

He stated that, due to the presence of numerous quarries in their area, the condition of the road has been adversely affected by the passage of quarry vehicles through the village. Furthermore, stones falling onto the roadway from overloaded vehicles pose a hazard to residents, including students commuting on two-wheelers to school and college. He formally requested that the road in their locality be widened and that CCTV surveillance cameras should be installed in Siruthamur Panchayat for enhanced security.

Then, the Sub Collector, Kancheepuram said that if any other members of the public want to express their opinions, they could come forward to register their opinion, views, and suggestion. Since, no others from the public came forward to share their views, and invited the District Environmental Engineer to summarize the meeting's proceedings.

Further, the District Environmental Engineer has summarized about the entire meeting proceedings and also informed that the said views, suggestion and responses of the public are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamil Nadu along with the written representations received from the Public.

Furthermore, the District Environmental Engineer informed that the Proceedings of the Public Hearing Meeting will be made to be displayed at the District Collectorate, Kancheepuram, Uthiramerur Taluk office, Sirumailur Village Panchayat Office, Sithalapakkam Village Panchayat Office and Office of the District Environmental Engineer, TNPCB, Sriperumbudur, and also in the TNPCB website of www.tnpcb.gov.in after the said public hearing. Comments, if any, on the proceeding

may be sent directly to the regulatory authorities (Member Secretary, State Environmental Impact Assessment Authority –Tamil Nadu / MoEF&CC) and the applicant concerned. Finally, the Sub Collector, Kanchipuram has thanked everyone who attended the meeting on behalf of Kancheepuam District Administration.

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Sriperumbudur**

**Sub Collector**
**Kancheepuram**

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the Tamil & English Newspapers dated 03.05.2025 for notifying the public hearing meeting.
2. Attendance sheet at the public hearing (Total pages 4 & 65 Persons).
3. Audio & Video stored in the Pen drive of the public hearing proceedings.
4. Photographs of the public hearing proceedings.
5. Soft and Hard copies of EIA Report, Executive Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. Petitions were received from the public / NGO / Environmentalist through E-mail, Postal and in the public hearing meeting.-04 No's

**காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், சிறுமையிலூர் கிராமம் புல எண்கள். 3/1A, 3/1B, 3/2 & 5/2 மற்றும் சித்தலபாக்கம் கிராமம், புல எண்கள். 86/1, 86/2, 87/1(பகுதி)ல் 4.37.50 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.M.R கோவிந்தன் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி அமைய மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தால் அனுமதி வழங்க பரிசீலிக்கப்படுவது தொடர்பாக 09.07.2025 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விவரங்கள்**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர்: | காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், சிறுமையிலூர் கிராமம் புல எண்கள். 3/1A, 3/1B, 3/2 & 5/2 மற்றும் சித்தலபாக்கம் கிராமம், புல எண்கள். 86/1, 86/2, 87/1(பகுதி)ல் 4.37.50 ஹெக்டேர் பரப்பளவில் **தி/ள். M.R கோவிந்தன் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி** திட்டம் நிறுவப்படுவது தொடர்பாக. |
| இடம்: | தி/ள்.ஆர்.ஆர்.கே. மஹால், எண். 167, திருமுக்கூடல், திருமுக்கூடல் – பினாயுர் ரோடு, உத்திரமேரூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம். |
| **நாள் மற்றும் நேரம் :** | 09/07/2025 – காலை 11.30 மணி |

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | பி.ஐ.ஆசிக் அலி | சார் ஆட்சியர்,<br>காஞ்சிபுரம். |
| 2. | வி.புருஷோத்தமன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர். |
| 3. | வீ.ரங்கசாமி | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர். |
| 4. | இரா.செல்வராஜன் | உதவி மேலாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர் |

| | | |
|---|---|---|
| 5. | இரா.திராவிடச்செல்வம் | தட்டச்சர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர் |
| 6. | M.R கோவிந்தன் | உத்தேசிக்கப்பட்ட குவாரி உரிமையாளர் |
| 7. | பொதுமக்கள் தன்னார்வலர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | ( 65 நபர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர் அவர்கள் சுற்றுச்சூழல் அனுமதிபெறும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களையும், பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் வரவேற்று காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், சிறுமையிலூர் கிராமம் புல எண்கள். 3/1A, 3/1B, 3/2 & 5/2, மற்றும் சித்தலபாக்கம் கிராமம், புல எண்கள்.86/1, 86/2, 87/1(பகுதி)ல் **தி/ள். M.R கோவிந்தன் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி**, மேற்கூறிப்பிடப்பட்டுள்ள புல எண்களில் 4.37.50 ஹெக்டேர் பரப்பளவில் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து கீழ்க்கண்ட விவரங்களையும் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006ன்படி வகை B1 மற்றும் அட்டவணை 1(a) இன் கீழ் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தின் செயல்பாட்டிற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தி தயாரிப்பதற்கான குறிப்பு விதிமுறைகளை Terms of Reference (TOR) 22.10.2024 அன்று வழங்கியுள்ளது.

மேலும், நிறுவனம் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடைபெற்றது.

இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி, தி/ள்.M.R கோவிந்தன் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்திற்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், திருமுக்கூடல் கிராமம் தி/ள்.ஆர்.ஆர்.கே.மஹாலில் 09.07.2025 அன்று காலை 10.30 மணியளவில் நடைபெறும் என்று "நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" மற்றும் "தினத்தந்தி" ஆங்கில மற்றும் தமிழ் நாளேடுகளில் முறையே 03.05.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும் அப்பகுதியிலுள்ள மக்களுக்கு இத்தகவல் ஒலிபெருக்கி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், இக்கூட்டத்தில் தி/ள்.M.R கோவிந்தன் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விவரங்களை திட்ட ஆலோசகர் (EIA Consultant) அவர்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை விரிவாக எடுத்துரைப்பார்கள் என்று தெரிவித்தார். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தங்களது கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்களின் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். தங்களுடைய கருத்துக்கள் முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் இத்திட்டத்தின் விவரம் மற்றும் திட்டத்தின் நிர்வாகத்தினரால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தொடர்பான விவரங்களையும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார் .

திட்ட ஆலோசகர் (EIA Consultant) அவர்கள் சார் ஆட்சியர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும் வரவேற்று நிழற்பட விளக்க காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

அதன்பின்னர் சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

1. <u>திரு.மாதவன், சிறுமையிலூர் ஊராட்சி மன்றதலைவர்.</u>

இவர் கூறுகையில் 2016ல் வர்தா புயலின் போது இக்குவாரி உரிமையாளர் 6 இலட்சம் மதிப்பிலான அரிசி, பருப்பு, எண்ணை போன்ற அத்தியாவசியமான உணவுப் பொருட்களை பொது மக்களுக்கு வழங்கியதாகவும், சிறுமையிலூர் மற்றும் சிறுதாமூர் பள்ளிகளுக்கு பாதை அமைத்து கொடுத்துள்ளதாகவும், கிராமத்திற்கு சிமெண்ட் சாலை மற்றும் அங்கன்வாடி கட்டிடம் அமைத்து கொடுத்துள்ளதாகவும் கூறினார். சிறுமையிலூர் – பழையசீவரம் கிராமத்திற்கு செல்லும் சாலையில் குவாரி வாகனங்கள் தண்ணீர் தெளிப்பதில்லை இதனால் கிராம மக்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் பாதிக்கப்படுவதாக கூறினார். எனவே குவாரி வாகனங்கள் சாலையின் இருபுறமும் தண்ணீர் தெளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். இறுதியாக இக் கல்குவாரி அமைவதினால் எந்த வித ஆட்சேபனையும் இல்லை எனவும் முழுமனதுடன் சம்மதிப்பதாக தெரிவித்தார்.

2. <u>திரு.சிவகுமார், அருங்குன்றம் கிராமம்.</u>

இவர் கூறுகையில் கல்குவாரியினால் தங்கள் பகுதியில் விவசாயம் செய்ய இயலவில்லை எனவும், தொடர்ந்து 40 வருடங்களாக சிறுமையிலூர், மதூர், சித்தலபாக்கம் கிராமங்களில் கல் குவாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருவதாகவும் இதனால் குழந்தைகளுக்கு உடல் நலக்குறை ஏற்படுவதாக தெரிவித்தார். குவாரி வாகனங்கள் சாலையில்

இருபுறமும் தண்ணீர் தெளிப்பதில்லை எனவும், சாலைகளில் ஆங்காங்கே வேகத்தடைகள் அமைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். கல்குவாரி வாகனங்கள் அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமாக கற்களை ஏற்றி செல்வதாகவும் இதனால் விபத்துக்கள் ஏற்படுவதாக கூறினார். இறுதியாக சிறுமையிலூர் மற்றும் சித்தலபாக்கம் கிராமத்திற்கு குவாரியே வேண்டாம் என கேட்டுக்கொண்டார்.

3. <u>திரு.சரவணன், சிறுதாமூர் கிராமம்</u>

இவர் கூறுகையில் தங்கள் பகுதியில் அதிகப்படியான குவாரிகள் இருப்பதால் குவாரி வாகனங்கள் தங்கள் ஊரின் வழியே செல்வதால் சாலை பாதிக்கப்படுவதாகவும், மேலும் அதிப்படியான கற்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களில் இருந்து கற்கள் சாலையில் விழுவதால் இருசக்கர வாகனத்தில் செல்வோர் பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் பாதிக்கப்படுவதாகவும் மேலும், தங்கள் பகுதி சாலையை விரிவு படுத்தி தரவேண்டும் என கேட்டுக்கொண்டார். இறுதியாக சிறுதாமூர் ஊராட்சிக்கு CCTV கேமரா அமைத்துக் கொடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் வேறு எவரேனும் தங்களது கருத்துக்களை தெரிவிக்க கேட்டுக்கொண்டார். கூற வரலாம் என அழைப்பு விடுத்தார். அதனை தொடர்ந்து வேறு எவரும் கருத்துக்களை கூற முன்வரைவில்லை என்பதால் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களை கூட்ட நடவடிக்கை பற்றி சுருக்கமாக எடுத்துரைக்க கேட்டுக்கொண்டார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர், திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகளின் சுருக்கத்தை எடுத்துரைத்தார். மேலும், இப்பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகள் ஆகியவை தொகுத்து, ஒலி மற்றும் ஒளி மூலம் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என்றும் தெரிவித்தார். பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட

எழுத்துப்பூர்வ கருத்துக்களையும் இதனுடன் சேர்த்து அனுப்பப்படும் என்று குறிப்பிட்டார்.

மேலும் மேற்குறிப்பிட்ட செய்தித்தாளில் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பின்படி, இப்பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பின் நகலானது பொது மக்களின் பார்வைக்காக காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உத்திரமேரூர் வட்டாட்சியர் அலுவலகம், சிறுமையிலூர் கிராம ஊராட்சி அலுவலகம், சித்தலபாக்கம் கிராம ஊராட்சி அலுவலகம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர், ஒரகடம் ஆகிய இடங்களில் வைக்கப்படும் எனவும், மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளமான www.tnpcb.gov.inல் வெளியிடப்படும் எனவும். நடவடிக்கை குறிப்பின் மீதான கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், உறுப்பினர் செயலர், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் –தமிழ்நாடு / MoEF&CC மற்றும் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரருக்கும் நேரடியாக அனுப்பலாம் என்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. இறுதியாக சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்தார்.

10/07/25

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருப்பெரும்புதூர்.

10/07/2025

10/7/25

சார் ஆட்சியர்,
காஞ்சிபுரம்.

10/07/25

<u>இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 03.05.2025).

2. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (4 பக்கங்கள் 65 நபர்கள்)
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் ஒலி மற்றும் ஒளிப்பட அடங்கிய Pendrive- 2 No's.
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
5. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
6. பொதுமக்கள் தன்னார்வ தொண்டு நிறுவனம் / சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடமிருந்து மின்னஞ்சல், அஞ்சல் மற்றும் பொது மக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 04 மனுக்கள்.